**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை (நிகழ்நிலை), ஆண்டு I (மீள் பரீட்சை) -2020**

# இலங்கையின் சட்ட முறைமை

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**
வினாத்தாள் எண்ணிக்கை: **05**

**மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. *சமிட் எதிர் சேகுத்தம்பி* என்ற வழக்கில் உரோம டச்சுச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளானவை தொடர் முறிவற்ற தீர்ப்புக்களினாலன்றி மாற்றியமைக்கப்பட முடியாதவையென நீதிமன்றம் தெரிவித்தது.

   இலங்கையில் உரோம டச்சுச் சட்டத்தின் பரப்பெல்லை மற்றும் பிரயோகத்தின் பின்னணியில் மேற்கண்ட நீதித்துறை அணுகுமுறையை ஆராய்க. உமது விடையானது தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் ஏதேனுமிருப்பின் அவற்றைக் கொண்டு ஆதாரங்காட்டப்படுதல் வேண்டும்.

2. *''நியதிச்சட்டங்களால் கூட்டிணைக்கப்பட்டிருந்ததான ஆங்கிலக் கோட்பாடுகளுக்கு மேலதிகமாக, மேற்கோள் காட்டப்பட்டதும் நீதிமுறைத் தீர்ப்புக்களுக்கு அடிப்படைகளாகிய கோட்பாடுகளையும் உள்ளடக்கியதான பல்வேறுப்பட்ட எடுத்துக்காட்டுதல்களை இலங்கையின் சட்ட அறிக்கைகள் கொண்டுள்ளன. தொழில்நுட்ப ரீதியாக முறையற்ற வகையில் இத்தகைய நீதிமுறை நுட்பத்தினை பயன்படுத்தியமையால், போற்றிக் காப்பாற்றப்பட்ட டச்சுச் சட்டத்தின் மீது ஆங்கிலச் சட்டமானது அத்துமீறியுள்ளது. ஆயினும், ஆங்கிலச் சட்டம் மற்றும் உரோம டச்சுச் சட்டத்தின் கலவையானது சந்தேகத்திற்கு இடமின்றி சட்ட அமைப்பை வளப்படுத்தியுள்ளது.''* (L.J.M. Cooray, *An Introduction to the Legal System of Sri Lanka*, Second (revised) edition 1992, 37pg.)

   நீர் உடன்படுகின்றீரா? நீதிமன்றச் செயன்முறையின் மூலமாக இலங்கையின் சட்ட முறைமைக்குள் ஆங்கில சட்டத்தினது அறிமுகத்தின் பின்னியின் மீது கவனஞ் செலுத்தி மேற்கூறப்பட்ட கூற்றை ஆராய்க. உமது விடையானது பொருத்தமான தீர்ப்புச்சட்ட அதிகார ஆதாரங்களினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. **(அ)** மற்றும் **(ஆ)** ஆகிய **இரண்டுக்குமே** விடை தருக.

(அ)

கண்டியச் சட்டமானது பொதுவாக சிங்கள சமூகத்தினது பிரிவொன்றுக்கு கண்டிய மாகாணங்களினுள் வசிக்கும் நபர்கள் மீது பிரயோகிக்கப்படுகின்ற ஆள்சார் சட்டமாகக் கருதப்பட்டது.

மேற்கூறப்பட்ட கூற்றின் அடிப்படையில், பிரித்தானிய காலப்பகுதி மற்றும் காலனித்துவத்திற்குப் பிந்திய காலப்பகுதியில் தாபிக்கப்பட்ட பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளின் ஏற்புடைமை தொடர்பில் ஆராய்க.

(40 புள்ளிகள்)

**மற்றும்**

(ஆ).

கண்டியைச் சேர்ந்த எஹெலெபொல என்ற பரம்பரையின் எஞ்சியுள்ளதொரு வாரிசு பினறி எஹெலெபொல என்பவளாவாள். அவள் கொழும்பு பல்கலைக்கழகச் சட்ட பீடத்தின் பட்டக்கற்கை மாணவியாவாள். கொழும்பை சேர்ந்த புத்திக பீரிஸ் என்பவனை பினறி காதலிக்கின்றாள். அவனும் அவளுடன் ஒரே ஆண்டில் படிக்கிறான். தற்போதைய பெருந் தொற்றுநோய் சூழ்நிலையில், பினறி கண்டியிலிருந்து கொழும்பிற்கு தனது கல்வி நடவடிக்கைகளுக்காக செல்வதைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்ததோடு அவள் கண்டியிலுள்ள தனது வீட்டிலிருந்தே நிகழ்நிலையினூடக கல்வி கற்க நேரிட்டது. பினறி மற்றம் புத்திக தங்களது இறுதித் தேர்வின் பின்னர் திருமணஞ் செய்ய தீர்மானித்ததோடு, திருமணத்தின் பின்னர் கொழும்பில் வசிப்பதற்கும் திட்டமிட்டனர். ஆயினும், புத்திக கண்டியன் ஒருவன் அல்ல என்பதனால் பினறியின் பெற்றோர் அவர்களின் தீர்மானத்தை எதிர்த்தனர்.

கண்டியச் சட்டத்தின் கீழ் வலிதான திருமணமொன்றை மேற்கொள்ள முடியுமா என்பது தொடர்பில் பினறி மற்றும் புத்திக ஆகிய இருவருக்கும் ஆலோசனை வழங்குக.

உமது சட்ட அபிப்பிரயாயத்தை எழுதுக. உமது விடையானது பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களைக் கொண்டு ஆதரங்காட்டப்படுதல் வேண்டும்.

(60 புள்ளிகள்)

4. **(அ)** மற்றும் **(ஆ)** ஆகிய **இரண்டுக்குமே** விடை தருக.

(அ).

“இலங்கையில் பிரயோகிக்கப்படுகின்ற முஸ்லிம் சட்டமானது உள்ளூர் முஸ்லிம்களின் தனித்துவமான பயன்பாடுகள் மற்றும் வழக்காறுகளைக் கொண்டதாகும் என்பதுடன் அவை இஸ்லாமிய சட்டவியலின் பாகமொன்றாக அமையமாட்டாது.”

மேற்கூறப்பட்ட கருத்தினை நீர் ஏற்கின்றீரா? தீர்க்கப்பட்ட வழக்குகளைக் கொண்டு உமது விடையை ஆதாரப்படுத்துக.

(50 புள்ளிகள்)

**மற்றும்**

(ஆ).

ரேமோன் என்பவன் கொழும்பிலுள்ள முன்னணி தொழிலதிபரொருவனாவான் என்பதுடன் 2010 ஆம் ஆண்டு கண்டியைச் சேர்ந்த சோனியா என்பவளைத் திருமணஞ் செய்து கொண்டான். அவனுடைய வர்த்தக ஈடுபாடுகள் காரணமாக பெரும்பாலான நாட்களில் அவன் கொழும்பிலேயே தங்கியிருப்பதுடன் வார இறுதி நாட்களில் மாத்திரமே சோனியாவைப் பார்க்கச் செல்வான். இதற்கிடையில், அவன் தனது தனிப்பட்ட செயலாளரான சகுரா என்பவளை திருமணஞ் செய்ய விரும்புகின்றான். ரேமோன் மற்றும் சகுரா இஸ்லாம் மதத்திற்கு மாறுவதற்கும், முஸ்லிம் சட்டத்தின் கீழ் தங்கள் திருமணத்தைப் பதிவு செய்யவும் விரும்புகின்றார்கள். தகுதிவாய்ந்ததொரு நீதிமன்றத்திலிருந்து விவாகரத்திற்கான கட்டளையைப் பெற்றுக்கொள்ளாது ரேமோன் பிரிதொரு திருமண ஒப்பந்தத்தில் இணைய முடியாது என்று சோனியா அவர்களது திருமணத்தினைக் கேள்விக்குட்படுத்துகின்றாள்.

முஸ்லிம் சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக வலிதான திருமணமொன்றை ரேமோன் செய்துகொள்ள முடியுமாவென அவனுக்கு ஆலோசனை கூறுக.

(50 புள்ளிகள்)

5. ரவி என்பவன் அவனது குடும்பம் பரம்பரையாக வாழும் பருத்தித்துறையில் பிறந்தான். அவனது உயர்க்கல்வியின் பின்னர், ரவி மற்றும் அவனது நண்பன் கமல் ஆகிய இருவரும் சொந்தமாக வியாபாரஞ் செய்யத் தீர்மானித்ததுடன் தமக்கென சொந்தமான கட்டிடமொன்றை அமைத்துக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்தில் கூட்டாக காணியொன்றை கொள்வனவு செய்து அதன் கூட்டுச் சொந்தக்காரர்களாயினர். குறித்த காணியில் கட்டிடத்தை கட்ட ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே ரவிக்கு கொழும்பிலுள்ள புகழ் பெற்றதொரு நிறுவனத்தில் வேலை வாய்ப்புக் கிடைத்தது. தனது வேலைவாய்ப்புக்காக கொழும்பிற்குச் சென்ற ரவி, கொழும்பிலுள்ள இந்துப் பெண்ணொருத்தியை திருமணம் செய்து அவளின் குடும்பத்தாருடனேயே வாழத்தொடங்கினான். ரவிக்கு தற்போது அவுஸ்திரேலியாவிலுள்ள பன்னாட்டு நிறுவனமொன்றிலிருந்து அதிக சம்பளத்தைக்கொண்ட வேலை வாய்ப்பொன்று வழங்கப்பட்டுள்ளது. தனது மனைவியுடன் அந்த வேலையை ஏற்றுக்கொள்வதற்கு அவுஸ்திரேலியா செல்ல அவன் தீர்மானித்துள்ளான். இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னதாக, கூட்டுச் சொந்தக் காணியில் தனது பங்கை விற்பனை செய்வதற்கு ரவி விரும்புகின்றான் மேலும் கமல் அப்பங்கினைச் சந்தை விலைக்கு கொள்வனவு செய்யத் தயாராக இருந்த போதிலும் ரவி அவனது பிரிதொரு நண்பனுக்கு அதனை விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளான்.

அ. இலங்கையிலிருந்து ரவி புறப்படுவதற்கு முன்னதாக தேசவழமையானது தொடர்ந்து அவன் மீது பிரயோகத்தினைக் கொண்டிருக்குமா என்று அறிய விரும்புகிறான். ஆலோசனை கூறுக.

(60 புள்ளிகள்)

ஆ. கூட்டுச் சொந்தக்காரன் என்பதனடிப்படையில் ரவியினுடைய பங்கினை கொள்வனவு செய்வதற்கு தனக்குள்ள உரிமை தொடர்பில் அறிய கமல் விரும்புகின்றான். அவனுக்கு ஆலோசனை கூறுக.

(40 புள்ளிகள்)

உமது விடையானது பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளைக் கொண்டு ஆதாரங் காட்டப்படுதல் வேண்டும்.

6. கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகள் தொடர்பில் நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிமன்றத்தை இனங் காண்பதுடன் அத்தகைய நீதிமன்றின் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தையும் விளக்குக.

அ. நிமல் என்பவன் தனது அயலவனான றுமால் என்பவனுடன் காணிப் பிணக்கொன்றைக் கொண்டிருப்பதுடன், இருவரும் நீதிமன்றத்தின் தலையீட்டை நாடத் தீர்மானித்துள்ளனர்.

ஆ. ஷர்மி என்பவன் அவளது கணவனுக்கு எதிராக பராமரிப்பு வழக்கொன்றையும், வன்ம உறவறுத்தல் என்ற காரணத்தின் மீது விவாகரத்துப் பெற்றுக்கொள்வதற்கு மற்றொரு வழக்கினையும் தாக்கல் செய்ய விரும்புகின்றாள்.

இ. பாத்திமா என்பவள் அவளுடைய மகளுக்காக தனது கணவனிடமிருந்து குழந்தைப் பராமரிப்பு பெற்றுக் கொள்வதற்காக வழக்கொன்றைத் தாக்கல் செய்ய விரும்புகிறாள்.

ஈ. உள்நாட்டு விவகார அமைச்சினால் அரச சேவை ஓய்வூதியத் திட்டத்திற்கான ஓய்வூதியதாரர்களின் நன்மைகள் குறித்து வெளியிடப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையானது கல்விச் சேவையின் ஓய்வூதியதாரர்களை விலக்கியமைந்துள்ளது என்பதாக பெர்னாண்டோ என்பவன் தெரிவிக்கின்றான். அடிப்படை உரிமைகள் மீறியுள்ளதாகக் கூறி புதிய சுற்றறிக்கையை கேள்விக்குட்படுத்த விரும்புகிறான்.

உ. மெனிகே என்பவள் அவளது இசை ஆல்பமானது மௌலிஸ் என்டர்டெயின்மட் லிமிடெட் என்ற நிறுவனத்தினால் மோசடியாகப் பிரதியாக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டுகிறாள். பதிப்புரிமையின் மீறலுக்கு எதிராக வழக்கொன்றை தாக்கல் செய்ய அவள் விரும்புகிறாள்.

(5x20 புள்ளிகள்)